# குடியிருப்பு / வீடு கண்டுபிடித்தல்

சுவிஸில் அதிகமானோர் வாடகைக் குடியிருப்புகளிலேயே வாழுகின்றனர். குடியிருப்புத் தேடுவது இலகுவானதல்ல அதே சமயம் வாடகைகளும் கூட.

## குடியிருப்புச் சந்தை நிலவரம்

சுவிஸின் அதிகூடிய மக்கள் வாடகைக் குடியிருப்புக்களிலேயே வாழுகின்றனர். வீடு கட்டும் நிலப்பகுதிகள் குறைவானபடியால் நகரங்கள் மற்றும் கிராமசபைகளின் நடுவே காலிக் குடியிருப்புகள் குறைவு. வாடகையும் கூட. வருமானத்தின் கால்வாசி வீட்டு வாடகைக்குச் செலவு செய்வது விதி விலக்கல்ல. குடியிருப்புகளை நகர மத்தியில் தேடாமல் சற்றுத் வெளியே தேடுவது பிரயோசனப்படும். கூட்டுறவு வீட்டு வசதி வாரியங்களில் வாடகை பெரும்பாலும் குறைவாகவே இருக்கும். இந்த நோக்கத்திற்காக கூட்டுறவு பங்குச் சான்றிதழ்கள் (Anteilsscheine) வாடகையின் தொடக்கத்தில் வாங்கப்பட வேண்டும். குறைந்த பணம் உள்ள குடும்பங்கள் சில நிபந்தனைகளின் கீழ், தங்கள் வாடகைக்கு (Familienmietzinsbeiträge) ஆதரவு கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பிக்கலாம்

## குடியிருப்பு / வீடு தேடுதல்

குடியிருப்பு வசதி வாய்ப்புக்களை அதிகமான இணையத்தளப்பக்கங்களில் காணலாம். அந்தப் பகுதிக்குரிய பத்திரிகைகளில் வீட்டு விளம்பரங்கள் வெளியாகும். சில வீட்டுரிமையாளர்கள் வீட்டு விளம்பரங்களை விற்பனை நிலையங்களிலுள்ள தகவல் பலகையிலோ அன்றி வேறு இடங்களிலோ (உ+மாக. கிராமசபை நிர்வாகம் ) வெளியிடுவர். அதிகமான குடியிருப்புகள் பகிரங்கமாக எழுதப்படுவதில்லை. ஆதலால் உறவுகள் மூலமோ அன்றி நண்பர்கள் மூலமோ கேட்டறிந்து கொள்ளலாம்.

## வாடகைக்கு விண்ணப்பித்தல்

எவருக்கு ஒரு குடியிருப்புப் பிடித்துள்ளதோ அவர் வீட்டுரிமையாளரிடமோ அன்றி வீட்டு நிர்வாகத்திடமோ தொடர்பு கொண்டு ஒரு பார்வையிடும் நேரத்தைக் குறிக்கலாம். வீட்டுக்கு விண்ணப்பிக்க விரும்பினால் சாதாரணமாக ஒரு பதிவுப்பத்திரத்தை நிரப்பிக் கொடுக்கவேண்டும். அதை விட அதிக வீட்டுரிமையாளர்கள் கடன் வசூலிப்பு இலாகாப் பதிவேட்டையும் (Betreibungsregisterauszug) வருமானத்தை மேலோட்டமாக அறியவும் விரும்புவர். இந்தப் பதிவேட்டை கடன் வசூலிப்பு இலாகாவில் (Betreibungsamt) பெறலாம். ஒரு வீட்டிற்கு அதிகமான விண்ணப்பங்கள் வருவதால் ஒரே நேரத்தில் பல குடியிருப்புகளுக்கு விண்ணப்பிப்பது அறிவுறுத்தப்புடுகிறது.

## குடியிருப்பு / வீடு வாங்குதல்

வதிவிட உரிமை C உள்ள வெளி நாட்டவர்கள் Basel-Stadt மாநிலத்தில்குடியிருப்புகள் வீடுகள் வாங்குவது கட்டுப்படுத்தப்படவில்லை. இது EU/EFTA நாட்டுப் பிரஜைகள் இங்கு வதிவிட உரிமை B அல்லது நிரந்தர வதிவிட அனுமதி C இருந்தாலும் பொருந்தும். வேறு நாட்டவர்கள் வதிவிட உரிமை B இருந்தால் அவர்கள் வதிவதற்கு மட்டும் ஒரு குடியிருப்பு அல்லது வீடு வாங்கலாம். வாங்குபவர் ஒப்பந்த சொத்தில் வாழத் திட்டமிடவில்லை என்றால், வாங்குவதற்கு அனுமதி தேவை. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வீட்டு மனை வாங்குவதற்கு ஒரு சான்றுறுதி அதிகாரி தேவை மற்றைய வதிவிட உரிமைகள் (L, F ) உள்ளவர்கள் குடியிருப்பு அல்லது வீடு வாங்குவதற்குச் சாத்தியமில்லை. வாடகைத் தகராறுகளுக்கான நடுவர் மன்றத்திலிருந்து (Schlichtungsstelle für Mietstreitigkeiten) மேலும் துல்லியமான தகவல்களைப் பெறலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/housing/finding-an-apartment--house